## எந்த மூலையில் விளையாட்டுப் போட்டிகள் நடந்தாலும்,

# தமிழ்நாட்டு வீரர்களை கலந்துகொள்ள வைப்பதில் அண்ணனாக துணை நிற்பேன்!

## சென்னையில் நடைபெற்ற ‘உயரிய ஊக்கத்தொகை’ வழங்கும் விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

**சென்னை, பிப். 20–**

**சென்னை, நேரு விளையாட்டு அரங்கில் 38வது தேசிய போட்டிகளில் பதக்கங்களைக் குவித்த உயரிய ஊக்கத்தொகை வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.**

**இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு, முதலமைச்சரின் உத்தரவின் பேரில், 38வது தேசிய போட்டிகளில் பதக்கங்களைக் குவித்த 158 வீரர், வீராங்கனைகளுக்கு 4 கோடியே 35 லட்சம் ரூபாய் அளவிற்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

அப்போது அவர், “முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிடமாடல் அரசு அமைந்தது முதல் விளையாட்டினை மாபெரும் இயக்கமாக முன்னெடுத்து வருகிறோம். தமிழ்நாட்டை இந்திய துணைக் கண்டத்தின் விளையாட்டுத்துறை தலைநகராக்கிடும் நம் பயணம் தொய்வின்றி தொடரும்” என்று குறிப்பிட்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரையின் விவரம் வருமாறு:

முதலமைச்சரின் உத்தரவின் பேரில் 38வது தேசிய போட்டிகளில் பதக்கங்களைக் குவித்த 158 வீரர், வீராங்கனைகளுக்கு 4 கோடியே 35 லட்சம் ரூபாய் அளவிற்கு உயரிய ஊக்கத்தொகை வழங்குகின்ற சிறப்பான நிகழ்ச்சியில், உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறோம். முதலில் உங்களை எல்லாம் வாழ்த்துகிறோம்.

### ஏராளமான சாதனைகள்

விளையாட்டுத்துறையில் தமிழ்நாட்டு வீரர்கள் தொடர்ந்து, ஏராளமான சாதனைகளைப் படைத்து வருகிறீர்கள். தடகள வீராங்கனை தங்கை வித்யா ராமராஜ், தேசிய நீச்சல் சாம்பியன் பெனடிக்ட் ரோகித் அவர்களும் இந்த மேடையில் நம்மோடு அமர்ந்திருக்கிறார்கள். விளையாட்டுத்துறையில் சாதிக்கத் துடிக்கும் பல வீரர்களுக்கு தம்பி ரோகித் அவர்கள் ஒரு முன்மாதிரி வீரராகத் திகழ்ந்துகொண்டு இருக்கிறார். சிறுவயதில் தன் காலில் காயம் ஏற்பட்டாலும், அதிலிருந்து மீண்டு, நீச்சல் பயிற்சியில் ஈடுபட்டு இன்றைக்குப் பல்வேறு சாதனைகளைத் தொடர்ந்து படைத்து வருகிறார்.

முதல் முறையாக 11வது `ஆசியன் ஏஜ் குரூப் ஸ்விம்மிங் சாம்பியன்ஷிப் 2023’இல் அவர் பங்கேற்றார். இந்த முறை 38வது தேசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார். தங்கம் மட்டுமல்ல, 50 மீட்டர் தூரத்தை 24.39 வினாடிகளில் நீந்தி, சாதனைப் பட்டியலில் இடம் பிடித்துள்ளார் தம்பி ரோகித் அவர்கள். தேசிய விளையாட்டுப் போட்டிகளில் 6 பதக்கங்களை வென்று, இன்றைக்கு நம் தமிழ்நாட்டிற்கே பெருமையைத் தேடித் தந்திருக்கிறார் தம்பி ரோகித் அவர்கள்.




தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பன்னாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதை ஊக்குவிக்கும் திட்ட (எம்.ஐ.எம்.எஸ்.) வீரரான தம்பி ரோகித் இன்னும் பல சாதனைகளைப் படைக்க நம் அனைவரும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வோம்.

### மகத்தான சாதனைக்கு அங்கீகாரம்!

அதேபோல், தேசிய தடகள வீராங்கனையான தங்கை வித்யா ராமராஜ், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதி மாணவியாவார். 1984இல் பி.டி.உஷா அவர்கள் நிகழ்த்திய சாதனையை ஈடுசெய்யும் விதமாக, 2022இல் நடைபெற்ற ஆசியன் போட்டிகளில் 400 மீட்டர் பந்தயத்தில் 54.42 வினாடிகளில் ஓடி சாதனை படைத்துள்ளார், தங்கை வித்யா. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வெண்கல பதக்கம் பெற்ற அவர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் `எலைட்’ திட்ட வீரராகவும் திகழ்ந்து வருகிறார்.

தற்போது நடைபெற்ற 38வது தேசிய விளையாட்டுப் போட்டியில் வெவ்வேறு பிரிவுகளில் ஒரு தங்கம், ஒரு வெள்ளியை வென்று சாதனை படைத்துள்ளார். அவர்கள் இரண்டு பேருக்கும், பதக்கங்களை வென்ற அத்தனைப்பேருக்கும் நாம் அனைவரும் நம் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வோம். உத்தராகண்ட் மாநிலத்தில் நடந்த 38வது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு சார்பாக கலந்துகொண்ட 158 பேரில், 92 பேர் பதக்கங்களை வென்று வந்துள்ளீர்கள். உங்களின் இந்த மகத்தான சாதனையை அங்கீகரிக்க வேண்டும், உங்களை எல்லாம் நேரில் சந்தித்துப் பாராட்ட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்த நிகழ்ச்சியை, நம் முதலமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில், ஏற்பாடு செய்துள்ளோம்.

தேசிய விளையாட்டுப் போட்டிகள் முடிந்து, ஐந்தே நாட்களில் உங்களுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. எப்படி நீங்கள் சாதனைப் படைத்துள்ளீர்களோ, அதேபோல் இன்றைக்கு தமிழ்நாடு அரசும் இந்த நிகழ்ச்சியின் மூலம் ஒரு சாதனை படைத்துள்ளது. இந்தியாவிலேயே இப்படி வெற்றி பெறுகின்ற வீரர்களை உடனுக்குடன் கௌரவப்படுத்துகின்ற மாநிலம், நம் தமிழ்நாடு மட்டும்தான். இன்னும் பெருமையோடு சொல்ல வேண்டும் என்றால், சென்ற ஜனவரி மாதம்தான் சர்வதேச அளவில் பதக்கங்களை வென்ற ஆயிரம் வீரர்களுக்கு உயரிய ஊக்கத்தொகையாக சுமார் 24 கோடியே 46 லட்சம் ரூபாயை முதலமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில் கொடுக்கப்பட்டது.

### விளையாட்டும் மற்ற துறைகள் போலவே!

இப்போது, பிப்ரவரி மாதத்தில் 158 பேருக்கு உயரிய ஊக்கத்தொகையாக 4 கோடியே 35 லட்சம் ரூபாயைக் கொடுத்திருக்கிறோம். கலந்துகொண்ட 158 பேரில் 29 பேர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் எலைட், எம்.ஐ.எம்.எஸ், சி.டி.எஸ் திட்டங்களால் வருடந்தோறும் பயன் பெற்று வருபவர்கள்.

நம் விளையாட்டு வீரர்களின் சாதனைகளுக்குப் பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான், நம் முதலமைச்சர் அவர்கள் முதல்முறையாக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இதுவரை சாம்பியன்ஸ் அறக்கட்டளை திட்டத்தின் மூலம் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் கலந்துகொள்வதற்காக 632 விளையாட்டு வீரர், வீராங்கனையர்களுக்கு கிட்டத்தட்ட 17 கோடி ரூபாய் அளவில் உதவிகள் செய்யப்பட்டுள்ளன.

விளையாட்டுத் துறைக்கு நமது அரசு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதற்கு இதைவிட ஒரு சிறந்த எடுத்துக்காட்டு கிடையாது. அதுமட்டுமல்ல விளையாட்டுத்துறையும் மற்ற துறை போலத்தான். விளையாட்டுத் துறையையும் தேர்ந்தெடுக்கலாம், உங்களின் வாழ்க்கையில் நிச்சயம் சாதிக்கலாம்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.2.2025) சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் உள்ள சென்னை ஒலிம்பிக் அகாடமியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில், உத்தரகாண்ட் மாநிலத்தில் நடைபெற்ற 38 வது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டின் வீரர், வீராங்கனைகளுக்கு ரூ. 4.35 கோடி உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணை தலைவர்கள் என். ராமசந்திரன், டாக்டர், அசோக் சிகாமணி, சர்வதேச தடகள வீராங்கனை செல்வி. வித்யா ராம்ராஜ், தேசிய நீச்சல் வீரர் செல்வன். பெனெடிக்டன் ரோஹித் ஆகியோர் உடனிருந்தனர்.

விளையாட்டுத்துறையில் திறமை இருந்தால், அரசு வேலைக்குச் செல்லலாம் என்ற நிலைமையை, நம் திராவிட மாடல் அரசு இன்றைக்கு ஏற்படுத்தி உள்ளது. விளையாட்டு வீரர்களுக்கு மூன்று சதவிகித சிறப்பு இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் நம் முதலமைச்சர் அவர்கள் 84 வீரர், வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு அரசு மற்றும் அரசுபொதுத்துறைநிறுவனங்களில் பணி நியமன ஆணைகளை அவரின் கைகளாலேயே வழங்கியுள்ளார்.

### அண்ணனாக துணைநிற்பேன்!

ஆகவே, நீங்கள் அத்தனைபேரும் தன்னம்பிக்கையோடு விளையாடுங்கள். உங்களுக்கு நம் முதலமைச்சர் அவர்களும், நம் துறையும், நம் அரசும் என்றைக்கும் துணை நிற்கும்.

இங்கு வந்துள்ள ஒவ்வொருரையும் இன்னும் சிறப்பாக, அதிகமாகப் பாராட்டுகிறேன். ஏனென்றால் அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. 2023ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு நம் தமிழ்நாடு 10வது இடத்தைப் பெற்றோம். இப்போது முன்னேறி ஆறாவது இடத்திற்கு வந்து இருக்கிறோம். விரைவில் முதல் இடத்தையும் பிடிப்போம் என்ற நம்பிக்கை உங்களைப் பார்க்கும் போது எனக்கு இருக்கிறது.

அது உங்கள் கையில்தான் இருக்கிறது. அதற்கு உங்களுக்கு என்ன உதவி வேண்டும் என்றாலும் கேளுங்கள், இந்த அரசு அதை செய்து தருவதற்கு தயாராக இருக்கிறது. உலகத்தின் எந்த மூலையில் விளையாட்டுப் போட்டிகள் நடந்தாலும் தமிழ்நாட்டு திறமையாளர்களை அதில் கலந்துகொள்ள வைப்பது இந்த அரசின் கடமை. ஒரு அண்ணனாக என்றைக்கும் உங்களுடன் நின்று எல்லா வகையிலும் துணை நிற்பேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று உயரிய ஊக்கத்தொகையைப் பெற வந்துள்ள அத்தனைப்பேருக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.ஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவர்கள் என்.ராமச்சந்திரன், டாக்டர் அசோக் சிகாமணி, தமிழ்நாடு வாலிபால் கூட்டமைப்பின் தலைவர் கௌதம் சிகாமணி, வாலிபால் கூட்டமைப்பின் ஆயுட்கால தலைவர் அர்ஜுன் துரை, தமிழ்நாடு ஒலிம்பிக் கூட்டமைப்பின் தலைவர் ஐசரி கணேஷ், தேசிய தடகள வீராங்கனை வித்யா ராமராஜ், தேசிய நீச்சல் சாம்பியன் பெனடிக்ட் உள்பட விளையாட்டு வீரர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.2.2025) சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் உள்ள சென்னை ஒலிம்பிக் அகாடமியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில், உத்தரகாண்ட் மாநிலத்தில் நடை பெற்ற 38 வது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டின் வீரர், வீராங்கனைகளுக்கு ரூ. 4.35 கோடி உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணை தலைவர்கள் என். ராமசந்திரன், டாக்டர், அசோக் சிகாமணி, சர்வதேச தடகள வீராங்கனை செல்வி, வித்யா ராம்ராஜ், தேசிய நீச்சல் வீரர் செல்வன். பெனெடிக்டன் ரோஹித் ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.2.2025) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம் சூரியூரில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள ஜல்லிக்கட்டு மைதானத்திற்கு அடிக்கல் நாட்டி, திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி சிவா எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.இனிகோ இருதயராஜ், ப.அப்துல் சமது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள், ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் உடனிருந்தனர்.



திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் ராசி மஹாலில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை கீழ் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சார்பில் முத்தூர் பேரூராட்சி, வெள்ளகோவில் நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 100 கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசை வழங்கி சமுதாய வளைகாப்பு விழாவினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். உடன் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் பெலிக்ஸ் ராஜா, தெற்கு மாவட்டப் பொறுப்பாளர், 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், நகர்மன்றத்தலைவர் கனியரசி முத்துக்குமார், மாவட்ட திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்) (பொ) கி.அபராஜிதா, மாவட்ட துணைச் செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், நகர செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.